
# தூதன்

தூதன் 33 நவம்பர் 2024 தூது 10

மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார். யோவான் 8:12




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை - தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஆயரம்மா மடல் | 05 |
| இராஸ் அல் கைமா போதகர் மடல் | 07 |
| ஆயரம்மா மடல் - இராஸ் அல் கைமா | 10 |
| செயலர் மடல் | 12 |
| நீங்கள் கிறிஸ்தவரா! | 14 |
| பேசப்பட்டது யாக்கோபின் நாட்களிலும் கன்னிமரி நாட்களிலும் யேசு பிறப்பது ! | 15 |
| திருச்சபை ஜெபநாள் | 16 |
| வேதவினா போட்டி | 19 |
| தெரிந்துகொள்வோம் | 22 |
| Health Tips | 24 |
| Children's Corner | 26 |
| தமிழ் வேதவகுப்பு - சிறுவர் பகுதி | 29 |
| Birthday Celebrants | 31 |
| Wedding Anniversary | 35 |
| ஆராதனைப்பாடல்கள் | 36 |
| JUDAS ISCARIOT | 37 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபை மக்கள் யாவருக்கும் எனது அன்பான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சபை ஊழியங்களை நிறைவாகச் செய்துவரும் நிர்வாகஸ்தர்கள் மற்றும் EC அங்கத்தினர்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். ஃபுஜைரா, மற்றும் இராஸ் அல் கைமா சபைகளில் நடைபெறும் ஊழியங்களுக்காகவும் ஆண்டவரைத் துதிக்கிறேன். தொடர்ந்து ஆண்டவர் தந்துவரும் சுகம், பெலன் மற்றும் பாதுகாப்பிற்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

கடந்த மாதங்களில் ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்து வழி நடத்தினார். குறிப்பாக, இராஸ் அல் கைமா சபையில் Harvest Festival சிறப்பாக நடைபெற ஆண்டவர் உதவி செய்தார். சபை ஊழியங்கள், Camp Ministries, Prayer Cell Ministries ஆகியவற்றில் பங்கு பெற ஆண்டவர் உதவி செய்தார். ஊழியங்களை உண்மையாய் செய்துவரும் பொறுப்பாளர்கள் மற்றும் தன்னார்வ உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

புதிய மாதத்தைக் காண ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தொடர்ந்து சபையையும், சபையின் ஊழியங்களையும் ஆண்டவர் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக. குறிப்பாக இம்மாதத்தில் நடைபெறும் கன்வென்ஷன் கூட்டங்கள், Harvest Festival மற்றும் Christmas ஆயத்தங்கள் ஆசீர்வாதமாக அமைய ஜெபம் செய்வோம். சபையின் CDA Approval-க்காகவும் நாம் தொடர்ந்து ஜெபிப்போம். ஆண்டவர் இப்புதிய மாதம் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய கிருபை செய்வாராக. இம்மாதத்திற்கான வாக்குத்தத்த வசனத்தை தியானிப்போம்.

2 நாளாகமம் 15:7

**நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள், உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு என்றான்.**

அன்பானவர்களே,

குரு ஒருவர் தன் சீடர்களுக்கு போட்டி ஒன்று வைத்தார். பெரிய ஆறு ஒன்று இருந்தது. அதைக் கடக்க பழைய, சேதமடைந்த தொங்கு பாலம் ஒன்றும் இருந்தது. பாலத்தின் நடுவே பெரிய துவாரம் ஒன்றும் இருந்தது.

யார் தைரியமாக ஆற்றைக் கடக்கிறாரோ அவரே சிறந்தவர் என்று அறிவிக்கப்படுவார் என்று குரு சொல்லியிருந்தார். போட்டியில் மூன்று சீடர்கள் பங்கு பெற்றனர். முதலாவது சீடன் பாலத்தின் பாதிவரை சென்றுவிட்டு பயந்து திரும்பிவிட்டான். இரண்டாவது சீடன் பாலத்தின் ஓட்டை வரை சென்றுவிட்டு முடியாமல் வந்து விட்டான். மூன்றாவது சீடன் நம்பிக்கையுடன் சென்றான். அவனும் முடியாமல் வந்துவிட்டான். ஆனால், மூன்றாவது சீடன் குருவிடம் வந்து நான் மீண்டும் முயற்சி செய்து பார்க்கிறேன் என்று அனுமதி கேட்டான். அவனே சிறந்த சீடன் என்று குரு அறிவித்தார். ஆம். அன்பானவர்களே, தோல்வியில் கற்றுக்கொண்டு மீண்டும் முயற்சி செய்பவனே சிறந்தவன். அவனே வெற்றியும் பெறுவான்.

இம்மாத தியானத்திற்கென்று நாம் தெரிந்துகொண்ட - "நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள். உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு" என்ற வேத வசனம் நாம் செய்யும் முயற்சிகளுக்கு தக்க பலன் நமக்கு உண்டு என்று நம்பிக்கை தருகிறது. இவ்வசனமானது நாம் 2 நாளாகமம் 15 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறபடி ஓதேதின் குமாரனாகிய அசரியா யூதாவின் ராஜாவாகிய ஆசாவுக்கு உரைத்த தீர்க்கதரிசனமாகும். ஆசா ராஜா யூதாவின் ராஜாவாகிய அபியாவின் குமாரன். ஆசா ராஜா "தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான்" (2 நாளா 14:2). சாலமோன் ராஜாவைத் தொடர்ந்து யூதாவின் ராஜாவாக பொறுப்பேற்ற ரெகோபெயாமின் நாட்களில் ஜனங்கள் கர்த்தரை விட்டு வழி விலகினபடியால் எகிப்தியர், எத்தியோப்பியர் போன்ற அந்நிய தேசத்தாரின் அச்சுறுத்தல் தொடர்ந்து கொண்டிருந்தது. மேலும், யெரோபெயாமின் தலைமையிலான இஸ்ரவேலரோடும் யுத்தம் தொடர்ந்தது. இச்சூழ்நிலையில்தான் எத்தியோப்பியனாகிய சேரா பத்து லட்சம் பேர்கள் கொண்ட சேனையோடும் முந்நூறு இரதங்களோடும் புறப்பட்டு யுத்தத்திற்கு வந்தான் (2 நாளா 14:9). ஆசா ராஜா தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே பலமுள்ளவனுக்காகிலும், பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்: எங்கள் தேவனாகிய கர்த்தாவே எங்களுக்குத் துணை நில்லும் என்று வேண்டிக்கொண்டான். கர்த்தர் எத்தியோப்பியரை முறியடித்து ஆசாவுக்கு வெற்றி தந்தார்.

ஜனங்கள் கர்த்தரை விட்டு விலகி நடக்க ஆரம்பித்த அந்நாட்களில் கர்த்தரிடமாய் திரும்பிய ஆசா ராஜாவின் முயற்சி வீண் போகவில்லை. இந்நிலையில்தான் ஓதேதின் குமாரனாகிய அசரியா யூதாவின் ராஜாவாகிய ஆசாவுக்கு ஆண்டவருடைய வார்த்தைகளை உரைக்கிறார். அவன் வெளியே ஆசாவுக்கு எதிர்கொண்டுபோய், அவனை நோக்கி: ஆசாவே, யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே, கேளுங்கள்

நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார் நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார் அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்... நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள் உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு என்றான். ஆசா ராஜாவின் நாட்களில் ஜனங்கள் ஆண்டவரைத் தேடினபடியால் ஆசா அரசாண்ட முப்பத்தைந்தாம் வருஷமட்டும் தேசத்தில் யுத்தமில்லாதிருந்தது. நன்மை பெறும்படி ஜனங்களை நடத்தின ஆசா ராஜாவின் செயல்களை சற்று ஆராய்வோம்.

முதலாவது...

### 1. முயற்சி செய்யுங்கள்: Try Your Best

2 நாளா 14:2 -5. ஆசா தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான். அந்நிய தேவர்களின் பலிபீடங்களையும் மேடைகளையும் அகற்றி, சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியும் கற்பனையின்படியும் செய்யவும் யூதாவுக்குக் கற்பித்து, யூதாவுடைய எல்லாப் பட்டணங்களிலுமிருந்து மேடைகளையும் விக்கிரகங்களையும் அகற்றினான். அவனுக்கு முன்பாக ராஜ்யம் அமரிக்கையாயிருந்தது. நியாயப்பிரமானங்களை மறந்து, தேவனுடைய பரிசுத்தத்திலிருந்து விலகி ஜனங்கள் நடக்க ஆரம்பித்தினால் அந்நிய படையெடுப்புகளையும், தோல்விகளையும் சந்தித்துக்கொண்டிருந்த நாட்களில் கர்த்தருக்கு நேராய், பரிசுத்தத்திற்கு நேராய் தேசத்தை நடத்த ஆசா ராஜா எடுத்த முயற்சிக்குப் பலன் கிடைக்கிறது. ஆசா தீர்க்கதரிசியாகிய ஓதேதின் தீர்க்கதரிசனத்தை கேட்டபோது, அவன் திடன்கொண்டு, அருவருப்புகளை யூதா பென்யமீன் தேசம் அனைத்திலும், எப்பிராயீமின் மலைத்தேசத்தில் தான் பிடித்த பட்டணங்களிலுமிருந்து அகற்றினான் (2 நாளா 15:8). ஆம், அன்பானவர்களே! சரிவை நோக்கியும், தோல்வியை நோக்கியும் வாழ்வு சென்று கொண்டிருக்கிறதே என்று ஒருபோதும் வருத்தப்பட வேண்டாம். தோல்வியிலிருந்தும், வீழ்ச்சியிலிருந்தும் மீளுவதற்கு முயற்சியை இன்றே ஆரம்பியுங்கள். Those who wait for perfect weather will never plant seeds; those who look at every cloud will never harvest crops. (Ecclesiastes 11:4). எனவே ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து வாழ்வை சீர்படுத்தும் செயல்களை இனியும் தாமதியாமல் இன்றே ஆரம்பியுங்கள்.

இரண்டாவதாக...

### 2. முன்னோக்கிச் செல்லுங்கள். Always Move Forward.

2 நாளா 15:8 b கர்த்தருடைய மண்டபத்தின் முன்னிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தைப் புதுப்பித்து...

பலிபீடத்தை புதுப்பித்து ஆண்டவருக்கு பலியிட ஆசா ராஜா எடுத்த முயற்சி அசுத்தத்திலிருந்து பரிசுத்ததிற்கு நேரான முன்னேற்றமாகும். எனவே தேசம் பலமடைகிறது. தேவனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்டு, இஸ்ரவேலிலிருந்து திரளான ஜனங்கள் அவன் பட்சத்தில் சேர்ந்தார்கள்.

"உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக்கடவது. வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயாதே் உன் காலைத் தீமைக்கு விலக்குவாயாக." என்று நீதிமொழிகள் 4: 25, 27ல் வாசிக்கிறோம். மத்தேயு 14: 25-33 வரையுள்ள வேத பகுதியில் இயேசு கடலின் மேல் நடக்கும் சம்பவமானது கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் பேதுருவும் கடலின் மீது நடக்கிறார். ஆனால் வசனம் 30ல் காற்று பலமாயிருக்கிறதை அவர் கண்டு பயப்படும் போது அமிழத் தொடங்குகிறார். இயேசுவை நோக்கி முன்னேறும் போது கடலின் மேல் நடந்த பேதுருவால் காற்றை நோக்கும் போது நடக்க முடியவில்லை. ஆம், அன்பானவர்களே! நாமும் இயேசுவை பற்றிக்கொண்டு முன்னோக்கிச் செல்லும் போது வெற்றிக்கு நேராய் ஆண்டவர் நம்மை நிச்சயமாகவே நடத்துவார்.

மூன்றாவதாக...

**3. முழு மனதோடு செய்யுங்கள்.. Do It Whole Heartedly.**

2 நாளா 15: 12 தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் தேடுவோம்...

ஆசா ராஜாவின் வழிகாட்டுதல் படி ஜனங்கள் கர்த்தரை முழு மனதோடு தேட தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்ட இஸ்ரவேலிலிருந்தம் திரளான ஜனங்கள் அவனோடு சேர்ந்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டு சுற்றுப்புறத்தாரால் அவர்களுக்கு யுத்தமில்லாத படிக்கு அவர்களை இளைப்பாறப்பண்ணினார். ஜனங்கள் சந்தோசப்பட்டார்கள். தேசம் முப்பத்தைந்து ஆண்டுகள் யுத்தம் இல்லாதிருந்தது. ஆசா தன் நம்பிக்கையை கர்த்தரை விட்டுவிலக்கி கர்த்தரை சார்ந்து கொள்ளாமல் சீரிய ராஜாவை சார்ந்துகொள்ள ஆரம்பித்த போதோ பல யுத்தங்களை சந்திக்க நேரிட்டது. "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது (2 நாளா 16: 9).
ஆம். அன்பானவர்களே, நாம் செய்யும் எந்த காரியத்திலும் முழு கவனம், முழு அக்கறை காண்பிக்கும் பொழுது மட்டுமே நாம் வெற்றி பெற முடியும். ஆண்டவரை முழு இருதயத்தோடு தேடும் போது நிச்சயமாகவே ஆண்டவர் அனைத்தையும் நன்மையாக நடத்துவார்.

நம்மை நினைத்து இம்மட்டும் பாதுகாத்து வழி நடத்திய தேவன் இனிமேலும் நம்மை நடத்துவார். ஏமாற்றங்களையும், தோல்விகளையும் கண்டு சோர்ந்து விடாமல், மீண்டும் உற்சாகத்தோடு நமது காரியங்களை நடப்பிக்க முயற்சி செய்வோம். எடுத்த முயற்சிகளில் பின்வாங்கிவிடாமல் முன்னோக்கிச் செல்வோம். ஆண்டவர் மீது முழு நம்பிக்கை வைத்து முற்றிலும் நம்மை அவருக்கு ஒப்புக்கொடுப்போம். நிச்சயமாகவே உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு.

கிறிஸ்துவின் பணியில்
Rev.K.சுதாகர்.
சபை போதகர்/தலைவர்.

## அத்தியும் அர்த்தங்களும்

உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார், அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம். அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச்செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம், அது ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம். உபாகமம் 8:7,8.

கர்த்தர் நல்லவர், நன்மையானவைகளையே நமக்குத் தருபவர். இஸ்ரவேலருக்கு ஆண்டவர் வழங்கிய கானான் தேசம் பல நன்மையான உணவுகளைக் கொண்டது. கோதுமை, வாற்கோதுமை, திராட்சை, அத்தி, மாதுளை, ஒலிவ எண்ணெய் மற்றும் தேன் போன்ற சுவையும் ஊட்டச்சத்துக்களும் அடங்கிய நல்ல தேசத்தையே அவர்களுக்குத் தந்து ஆசீர்வதித்தார். அவைகளில் அத்தி மரம் சிறப்பானது. அதன் நற்கனிகளும் சுவை, சத்துக்கள் மட்டுமல்லாமல் பல அர்த்தங்களும் உள்ளவைகள். அவைகளின் பண்புகளை சற்று ஆராய்வோம்.



அத்திப்பழத்தின் மருத்துவ குணங்கள்:

1. இரத்த அழுத்தம் குறைய உதவுகிறது
2. ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்க உதவுகிறது
3. செரிமானத்தை மேம்படுத்துகிறது
4. எலும்பு அடர்த்தியை அதிகரிக்கிறது
5. மலச்சிக்கலை போக்க உதவுகிறது
6. உடல் எடை குறைய உதவுகிறது
7. இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது

### 1. ஆசீர்வாதத்தின் அடையாளம்:

ஏதேன் தோட்டத்தில் உள்ள மரங்களில் முதன்முதலில் பெயர் சொல்லப்பட்ட மரம் அத்தி (ஆதி. 3:7). அத்தி இலைகளைக் கொண்டு தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள். ஆதாம், ஏவாள் ஆகிய இருவருக்கும் முதலாவது ஆடை அத்தி இலைகளிலே உருவாக்கப்பட்டது (ஓசியா 9:10). அத்தி மரத்தில் முதல் தரம் பழுத்த கனிகளைப்போல உங்கள் பிதாக்களைக் கண்டுபிடித்தேன் என்று வசனம் கூறுகிறது. முதலாவது என்பது மிகவும் சிறப்பானது, மேன்மையானது. அத்தகைய மேலான ஆசீர்வாதத்தை அத்தியை வைத்து குறிப்பிடுகின்றனர். முதலாவது பெயர் சொல்லப்பட்ட மரம் அத்தி, அத்தியிலிருந்து தைக்கப்பட்ட முதல் ஆடை, முதல் தரம் பழுக்கப்பட்ட அத்திப்பழம் என்ற ஆசீர்வாதத்தை அத்தி இன்றளவும் பெற்றுள்ளது.

**2. ஆரோக்கியத்தின் அடையாளம்:**

அத்திபழம் இன்றளவும் அநேக மருத்துவக் குணங்களைக் கொண்டது (2 இராஜா. 20:7). எசேக்கியா ராஜாவுக்கு அத்திப்பழ அடைகளை வைத்து பிளவையின்மேல் பற்றுப்போட்டபோது அவன் பிழைத்தான் என்று வசனம் கூறுகிறது. அன்றைய காலத்திலும் அத்தியின் மருத்துவகுணம் அநேகருக்கு தெரிந்து இருக்கிறது (2சாமு. 30:12) எகிப்தியன் ஒருவன் வியாதிப்பட்டபோது அத்திப்பழ ஆடையின் ஒரு துண்டையும், வற்றலாக்கப்பட்ட 2 திராட்சைக் குலைகளையும் சாப்பிட்டு பின்பு உயிர் பெற்றான். அதன் பெலத்தினால் 3 இரவும், பகலும் எதுவும் சாப்பிடாமல் இருந்தான். அவ்வளவு ஊட்டச்சத்தும், ஆரோக்கியமுமான உணவு அத்திபழம். இன்று நாம் சாப்பிடுகிற அத்தி, வேதாகமத்தில் குறிப்பிடுகின்றது போன்று செழிப்பானது அல்ல. அத்திப்பழத்தில் எட்டுவகை உள்ளது என்று குறிப்பிடுகின்றனர். இயற்கையான முறையில் அநேக மருத்துவ குணங்கள் கொண்ட பழங்களை தேவன் நமக்குத் தந்திருக்கின்றார். அதை உண்டு ஆரோக்கியமான வாழ்வு வாழ நாம் பலப்படுவோம்.

**3. ஆதங்கத்தின் அடையாளம்:**



அத்திமரத்தின் கனியற்ற நிலை ஆவிக்குரிய வாழ்வில் வறட்சியைக் குறிக்கிறது (மத். 21:18,19). பசியான நிலையில் கனிகளைத் தேடும்போது மரத்தில் கனி இல்லை. இலைகள் மாத்திரம் செழிப்பாக இருக்கும்போது கனியில்லையே என்று ஆண்டவர் ஆதங்கப்படுகிறார் (லூக்கா 13:6-9). அத்திமரம் மூன்று வருடமாய் கனி கொடுக்காததினால், அந்த தோட்ட எஜமான் அதை வெட்டிப்போட சொல்லுகிறார். அது நிலத்தை ஏன் கெடுக்கிறது என்றார். தேவன் நம்மில் கனியுள்ள வாழ்வை எதிர்பார்க்கிறார். நாம் புசித்து, குடித்து செழிப்பான அத்தி இலையைப்போல கனி இல்லாத வாழ்வை வாழ்கிறோம். எனவே தேவன் நம்மீது ஆதங்கப்படுகிறார். கனி கொடுக்காத வாழ்க்கை வாழ்ந்து அத்தி நிலத்தைக் கெடுப்பது போன்று நாமும் மற்றவர்களை தவறான வழிநடத்துதலுக்கு கொண்டு செல்லக்கூடாது. நாம் தேவனை ஆதங்கப்பட செய்யக்கூடாது. கனியுள்ள வாழ்வையே வாழ்ந்து காட்டுவோம்.

அத்தி மரமும் அதன் அர்த்தங்களும் அறிவிப்பவை ஏராளம். ஆசீர்வாதத்தின் அடையாளம், ஆரோக்கியத்தின் அடையாளம், ஆண்டவரின் ஆதங்கத்தின் அடையாளமாக பயன்படுத்தப்பட்டுள்ள அத்தி நம்மை ஆண்டவரில் நிலைத்திருக்க, கனி கொடுக்க நம்மை அழைக்கிறது. கனியுள்ள வாழ்வு வாழ நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர் நமக்கு ஆசீர்வாதமாக, ஆரோக்கியமாக வாழ கிருபை செய்வார்.

கிறிஸ்துவின் ஊழியத்தில்
திருமதி. ஸ்மைலி சுதாகர்
ஆயரம்மா, துபாய்.

# SENIOR CITIZEN DAY










## SENIOR CITIZEN DAY

















# SENIOR CITIZEN DAY










# SENIOR CITIZEN DAY












# CSI TAMIL PARISH - DUBAI

JEBEL ALI SERVICE - WORSHIP SONG BY PRAYER CELL







YOUTH SUNDAY



# இராஸ் அல் கைமா போதகர் மடல்

அன்பிற்கினிய திருச்சபையின் அன்பர்களே,

ஆண்டவரும், இரட்சகருமாகிய சிறு பிள்ளைகளின் நேசராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் புதிய மாதத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நவம்பர் மாதம் சிறாருக்குரிய மாதம் என்று சொன்னால் மிகையாகாது. ஏனென்றால் இந்த மாதம் முதல் ஞாயிறு உலக ஞாயிறு பள்ளி தினமாகவும், நவம்பர் 14 குழந்தைகள் தினமாகவும், மூன்றாம் ஞாயிறு நவம்பர் 17ஆம் தேதி பெண் குழந்தைகளின் ஞாயிராகவும் அனுசரிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போதனையில் சிறு பிள்ளைகள் சிறப்பு இடம் பெறுகின்றனர். இந்த சிறப்பை நீண்ட காலத்துக்குப் பின்புதான் திருச்சபை அடையாளம் கண்டது. அதுவே ஞாயிறு பள்ளி என்ற பெயரில் ராபர்ட்ரெய்க்ஸ் அவர்களால் 1780 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. வீதியில் தொடங்கப்பட்ட ஞாயிறு பள்ளி திருச்சபைக்குள் படிப்படியாக கடினப்பட்டு வந்தது. திருச்சபை ஞாயிறு பள்ளியின் தேவையை உணர்ந்ததால் சிறுவர்கள் மத்தியில் இறைப்பணி வளர்ந்தது. "சிறுவர்களை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்துதல்" என்பதே ஞாயிறு பள்ளியின் நோக்கமாகும். கிறிஸ்தவப் பண்புகளில் எவையெல்லாம் நடைமுறையில் இல்லையோ அதை வாழ்வில் செயல்படுத்துவதற்கு வழிகாட்டியாய் ஞாயிறு பள்ளி செயல்படுகிறது.

**"இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்,**
**கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்". சங்கீதம் 127:4**

ஆகவே இந்த மாதம் நாம் சிறு பிள்ளைகளுடைய வாழ்வில் ஆண்டவரின் செயல்பாடுகளை தியானிப்போம்.

### அங்கீகரிக்கும் ஆண்டவர்

"இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு
இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்,
பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" மத்தேயு 19:14

சிறுவர்கள் அற்பமானவர்களாக எண்ணப்பட்ட காலத்தில், சிறு பிள்ளைகளைத் தடுத்தோரிடம் இயேசு கூறிய வார்த்தை, இயேசுவோ: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள், பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" மத்தேயு 19:14 என்று அங்கீகரிக்கிறார். ஆகவே குழந்தைகள் போல் மாறுவோர் மட்டுமே இறையாட்சிக்குட்பட முடியும் என்கிறார். அப்படியானால் இறையாட்சிக்குச் சொந்தக்காரர்களாகிய குழந்தைகளை அங்கீகரிக்கப்பது அவசியமாகும்.

ஒருமுறை சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பரலோகராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள். இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 18:1-3) என உறுதிபட தெரிவித்தார். ஆகவே இறையரசின் பங்காளிகளான இப்பிள்ளைகள் ஆலயத்தில் வளர வேண்டும். ஞாயிறு பள்ளியில் நமது பிள்ளைகள் கற்றுக் கொள்ளத் தூண்டப்பட வேண்டும். சாமுவேல் எனும் சிறுவன் ஆலயத்தில் வளர்ந்து மேன்மை பெற்றார் (1சாமு 3:1). இயேசு கிறிஸ்துவும் சிறுவராக ஆலயம் சென்று போதகர்களுக்கே முன்மாதிரியானார் (லூக் 2:46,47). நம் பிள்ளைகளும் ஆலயத்தில் வளரவும், இறை அறிவில் வளர்க்கப்படவும் நாம் அவர்களை அங்கீகரிக்க வேண்டும்.

## அக்கறையுள்ள ஆண்டவர்

இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்தேயு 18:10

பிள்ளைகளைச் சுமையாகக் கருதாதபடி சுமந்து கொண்டு செல்வது பெற்றோரது கடமை (உபாகமம் 1:31) கடவுளும் இஸ்ரயேல் மக்களை பிள்ளைகளைப்போன்று சுமந்து கொண்டு வந்தார். பிள்ளைகள் நன்மை தீமை அறியாதவர்கள். நன்மை தீமை அறியாதவர்களை நன்மையான வழிகளில் நடத்துவது திருச்சபையின் கடமை. மனோவா தனக்கு குழந்தை கிடைக்கும் என்ற இறைவாக்கை கேட்ட போது (நியா 13:12) “எப்படி பிள்ளையை வளர்க்க வேண்டும் ? எப்படி நடத்த வேண்டும்?” என்று அக்கறையோடு கேட்டார். திராட்சைரசம், மதுபானம் குடியாமல் வளர்க்கப்பட வேண்டும் என்று மனோவாவிற்கு சொல்லப்பட்டது. சிறுவர்களை இடறச்செய்கின்ற நிகழ்வுகளை திருச்சபை விட்டுவிட்டு இறையரசுக்குரியோராக அவர்களை நன்மையான வழிகளில் உருவாக்க வேண்டும். இன்று திருச்சபைக்குள்ளிருக்கும் மாதிரியில்லா வாழ்வு வளரும் குழந்தைகளுக்கு இடறுதற்குரியதாய் இருக்கின்றது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, இடறல்களை கொடுப்பவனுக்கு ஐயோ என்கிறார் (மத் 18:7). அதுமட்டுமல்ல, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும். மத்தேயு 18:6 என எச்சரிக்கிறார். கடலின் ஆழத்தில் தள்ளப்படும் நபர் வரலாற்றையே இழந்து போவார் என்பது தான் உண்மை. இத்தனை கொடுமையான தண்டனையை இயேசு பிள்ளைகளின் பற்றுறுதி வாழ்வுக்குக் களங்கம் ஏற்படுத்துவோரைக் குறித்துக் குறிப்பிட்டு குழந்தைகள் மீதான அக்கறையை வெளிப்படுத்துகிறார்.

ஞாயிறு பள்ளியும் பிள்ளைகளைப் பற்றுறுதியில் வளர்க்க வேண்டும். அதேவேளை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் உள்ளிட்டோர் நல்ல முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும். கேட்டுக் கற்றுக் கொள்வதைவிட இன்று பிள்ளைகள் அதிகம் பார்த்தே கற்றுக் கொள்கிறார்கள். எனவே பிள்ளைகள் மிகுந்த அக்கறையுடன், கவனத்துடன் பற்றுறுதிப் பாதையில் வளர்க்கப்பட வேண்டும்.

### ஆசீர்வதிக்கும் ஆண்டவர்

அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார், மாற்கு 10:16

யூத சமூகத்தில் சிறுவர்கள் ஒரு பொருட்டாக எண்ணப்படாதவர்கள். இக்கருத்தே சீடர்களாலும் பின்பற்றப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் கை தங்கள் பிள்ளைகள் மீது படவேண்டும் என்ற எண்ணம் புரட்சியான எண்ணம். பிள்ளைகள் ஆன்மீக உருவாக்கத்தில் வளர்க்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் பெற்றோரிடம் இருந்தது. சீடர்கள் யூத நம்பிக்கையில் இன்னும் தொடருகின்றார்கள். ஆகவே. சிறுவர்களுக்கு இடம் மறுத்தார்கள். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார். இல்லத்தை அழகுறச் செய்து மகிழ்வினை தந்திடச் செய்யும் இறைவனின் அருட்கொடைகள் தான் குழந்தைச் செல்வம். குடும்பம் என்பது மரம் போன்றது. குழந்தைகள் தளிர்கள். குழந்தை தை போன்றவர்கள். அதாவது நாற்று போன்றவர்கள். திருச்சபையின் தீபங்கள். இல்லத்தின் ஒளிவிளக்குகள். பெற்றோருக்கு மகிழ்வை, நிறைவைத் தரக்கூடியவர்கள். இறைவனுக்குரிய குணங்களைத் தன்னகத்தே கொண்டவர்கள். எனவே தான் “குழந்தையும் தெய்வமும் மனத்தால் ஒன்று. மன்னிக்கும் குணத்தால் ஒன்று” என்று முன்னோர் கூறுவர். இக்குழந்தைகள் கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளோடு. ஆண்டவர் அருளும் ஆசீர்வாதத்தில் வளர்க்கப்பட வேண்டியவர்கள். இது திருமறை நமக்கு கற்றுத் தரும் உண்மை.

“இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்”. சங்கீதம் 127:4ல் பார்க்கிறோம். ஆகவே நம்முடைய இல்ல ஆசீர்வாத்தித்தின் வாய்க்கால்களாகிய சிறு பிள்ளைகளை அங்கீகரித்து, அன்போடு அரவணைத்து, ஆண்டவர் அருளும் ஆசீர்வாதத்திற்கு நேராக வழிநடத்த ஆண்டவர் தாமே நம்மை பெலப்படுத்துவாராக.

ஆண்டவரின் அருட்பணியில்,
அருட்பணி. எ.ஜெம்சன் ஜெபசிங்.
ஆயர் - இராஸ் அல் கைமா.

## சமாதானம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! புதிய மாதத்தின் வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். மீண்டும் ஒரு புதிய மாதத்திற்குள் கர்த்தர் நம்மை அழைத்துக்கொண்டு வந்ததற்காக, அவரை ஸ்தோத்தரிக்கிறேன். ஆவியின் கனி பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்த மாதத்தில், நாம் சிந்திக்க இருக்கும் தலைப்பு “சமாதானம்”.

நம் வாழ்வில் சந்தோஷம் எவ்வளவு முக்கியமோ, அதைப்போல சமாதானமும் முக்கியம். இன்னும் சொல்லப்போனால் சமாதானம் இருக்கும் இடத்தில் சந்தோஷமும் இருக்கும். அப்படிப்பார்த்தால் சமாதானம் மிக முக்கியம்.

இந்த உலகில் ஒருவர் சமாதானம் இல்லாமல் வாழமுடியாது. இன்றைய காலகட்டத்தில் நாம் தேடி அலையும் ஒரு விஷயமாக இது மாறிவிட்டது.

பெற்றோர்களுக்கு தங்கள் வேலையில் உள்ள stress, பிள்ளைகளுக்கு படிப்பில் உள்ள stress, பெரியோர்களுக்கு உடல் பலவீனத்தால் stress, இன்னும் அனேக காரியங்களைக் குறித்து சொல்லலாம்.

இதன் மத்தியில் peaceful ஆன life நமக்குத் தேவை. உலகத்தில் இதற்காக நிறைய காரியங்கள் உண்டு. Yoga, Health exercise, Entertainment show, Pub, Club etc., இதெல்லாம் உலகம் தரக்கூடிய சமாதானம். இது நிலையில்லாதது, தற்காலிகமானது.

கர்த்தர் சொல்கிறார். “வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்று. நமது கவலை, பாரம், எதிர்பார்ப்பு இதைக்குறித்து நாம் கலக்கத்தோடு காணப்படும் நேரத்தில், கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாகில், அவர் தமது சமாதான வார்த்தையை நமக்குத் தந்தருள்வார்.

மாற்கு 5:34-ல் பார்க்கிறோம். உலக வைத்தியரால் குணப்படுத்த முடியாத ஒரு ஸ்திரீயின் நோயை, இயேசு கிறிஸ்துவின் வஸ்திரம் குணப்படுத்தியது. அவர் அந்த ஸ்திரீயை நோக்கி, “நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்.”

கர்த்தரிடத்தில் இருந்து நாம் பெற்றுக்கொள்ளும் சமாதானம், நமக்கு நிரந்தர தீர்வை அளிப்பதாக உள்ளது. அது நம் வேதனையை, கவலையை போக்குவதாக உள்ளது. இந்த உலகத்தில் நமக்கு போராட்டம், பாடுகள் உண்டு. அதன் மத்தியில் நாம் சந்தோஷமாக, சமாதானமாக இருக்க வேண்டும் என்றால், அது கர்த்தர் நமக்கு தரக்கூடிய சமாதானமாகத்தான் இருக்கமுடியும்.

யோவான் 14:27-ல் "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் என்றும், உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்றும் இயேசு கூறுகிறார். இதன் பின்புலத்தைப் பார்த்தால், அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுகிறவன் எவனோ, அவனை பிதாவும் மகிமைப்படுத்துவார், குமாரனும் மகிமைப்படுத்துவார்.

எனவே நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்தால், இந்த உலகத்திற்குரிய கவலைகளை விட்டுவிட்டு, அவர் தரக்கூடிய மெய் சமாதானத்தை பெற்றுக் கொள்ளமுடியும்.

"உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும்,
உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக".

கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

திருமதி.வனிதா ஜெம்சன்
ஆயரம்மா - இராஸ் அல் கைமா.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - நவம்பர் 2024

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-11-2024 | திருச்சபையில் குழந்தைகள் | யாத்தி. 2:1-10 | 3யோவான் 1-15 | லூக்கா 18:15-17 | 47 |
| 10-11-2024 | விளக்குத் தண்டின் மீது தீபம் | சகரியா 4:1-14 | 1 கொரிந். 3:10-15 | மத்தேயு 5:14-16 | 27 |
| 17-11-2024 | பெண் குழந்தைகளைப் பாதுகாத்தல் | யோபு 42:10-17 | அப்போ. 16:16-18 | மத்தேயு 15:21-28 | 45 |
| 24-11-2024 | அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகை | உபாகமம் 8:1-10 | பிலிப்பியர் 4:4-9 | லூக்கா 21:1-4 | 100 |

# HARVEST FESTIVAL 2024 - RAS AL KHAIMAH













# HARVEST FESTIVAL 2024 - RAS AL KHAIMAH












# HARVEST FESTIVAL 2024 - RAS AL KHAIMAH
















## HARVEST FESTIVAL 2024 - RAS AL KHAIMAH























## HARVEST FESTIVAL 2024 - RAS AL KHAIMAH






















# HARVEST FESTIVAL 2024 - RAS AL KHAIMAH



















# LENTEN QUIZ PRIZE DISTRIBUTION 2024



# LENTEN QUIZ PRIZE DISTRIBUTION 2024





















# செயலர் மடல்

“தந்தானைத் துதிப்போமே” என்ற கீர்த்தனைப் பாடலை பலமுறை பாடி தேவனை ஆராதித்துள்ளோம். கர்த்தர் தந்த எல்லாவித நன்மைகளையும், அருளிச் செய்த அனைத்து ஆசீர்வாதங்களையும், பாதுகாத்து நடத்திய அற்புத நடத்துதலையும், தந்தருளிய ஆன்மீக ஆசீர்வாதங்களையும் எண்ணி எண்ணி மகிழ்ச்சியோடு திருச்சபையாக மாட்சிமையும், மகிமையும் நிறைந்த கர்த்தருக்கு, தேவாதி தேவனுக்கு நன்றியுடன் நம்மையே படைத்து, நம்முடைய கையின் பிரயாசங்களை படைத்து, Harvest Festival பண்டிகையை ஆசரிப்பதற்காக நடைபெற்றுவரும் அனைத்து ஒழுங்குகளுக்காக ஜெபிப்போம். கர்த்தர் தந்தருளிய நல்ல திருச்சபைக்காக மகிமையும், கனமும், ஸ்தோத்திரமும் தேவாதி தேவனுக்கே செலுத்துகிறேன்.

கர்த்தருடைய மேலான கிருபையால் கடந்த மாதம் ஒவ்வொரு வாரமும் ஆலய ஆராதனைகள் ஆசீர்வாதமாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். 06-10-24 அன்று Rev.H.John Samuel, CSI Synod Department of Ecology Associate Director அவர்களும், 20-10-24 அன்று Rev.Gnanasekaran Daniel, National Secretary for Human Resources-IEM அவர்களும், 27-10-24 அன்று Rev.Bhaktha Thiyagarajan, CSI Alain Church அவர்களும் ஆராதனையில் இறைசெய்தி வழங்கினார்கள். ஆலய ஆராதனைக்குப் பின்பு வழக்கம்போல Junior Church, Cornerstone, Youth Fellowship, Mens Fellowship, Womens Fellowship, உபவாச ஜெபம், முகாம் சந்திப்பு ஊழியங்கள், Area Prayer Cell ஊழியங்கள் யாவும் கர்த்தர் கிருபையால் ஒழுங்காக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 7:00 மணி முதல் 8:30 மணி வரை Jebel Ali ஆலயத்தில் நடைபெற்றுவரும் ஆராதனைகளில் ஒவ்வொரு வாரமும் Prayer Cell சார்பாக முறையாக விசேஷித்த பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். 26-10-24 அன்று Jebel Ali ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனை பாடல் ஆராதனையாக நடைபெற்றது. அநேகர் விசேஷித்த பாடல்கள் பாடி கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

நமது திருச்சபையின் வருடாந்திர கன்வென்ஷன் கூட்டம் நவம்பர் மாதம் 11,12,13 திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் மாலை 8:00 மணி முதல் 10:00 மணி வரை Trinity Church வளாகத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. Bro.Swaroop Krishna அவர்கள் தேவசெய்தி கொடுப்பார்கள். நவம்பர் மாதம் 10-ம் தேதி ஞாயிறு அன்று காலை ஆராதனையிலும், காலை 11:00 மணிக்கு Young Minds Retreat-லும் செய்தி கொடுப்பார்கள். 16-ம் தேதி சனிக்கிழமை காலை 10:00 மணி முதல் 1:00 மணி வரை சபையோருக்கான Retreat நடைபெறுகிறது. அனைத்து நிகழ்வுகளுக்காக ஜெபிக்கவும், சபையாக கலந்து கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

Harves Festival Weekly sales வாரந்தோறும் அந்தந்த Area Prayer Cell சார்பாக தவறாது நடைபெற ஒத்துழைப்பு தந்த அனைத்து குழு பொறுப்பாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்த்தருக்குச் சித்தமானால் இம்மாதம் 24-11-24 ஞாயிறு அன்று காலை நமது சபையின் அறுவடைப் பண்டிகை - நன்றி செலுத்தும் பண்டிகையாக Movenpick Grand Al Bustan Hotel, Garhoud-ல் வைத்து நடைபெறும். எல்லா ஒழுங்குகளுக்காகவும் தொடர்ந்து ஜெபிக்க கேட்டுக் கொள்கிறேன்.

சபையாக நாம் தாங்கிவரும் 100 மிஷனெரிமார்களுக்காக, அவர்கள் ஊழிய தேவைகள், பாதுகாப்புக்காக மற்றும் சபையாக நாம் உதவிகள் செய்துவரும் பற்பலவித உதவி ஊழியங்களுக்காகவும், கொளகூர் மிஷனெரி மருத்துவமனையில் பணியாற்றிவரும் Dr.Melchis, Dr.Mrs.Daphni அவர்கள் செய்துவரும் மருத்துவ பணிகளுக்காகவும் தொடர்ந்து பாரத்தோடு ஜெபிப்போம்.

அரசாங்க அங்கீகாரத்துக்காக, Worship License, CDA மூலம் பெறுவதற்காக செய்துவரும் எல்லா முயற்சிகளையும் கர்த்தர் முன்னின்று கிடைக்க கிருபை செய்யுமாறும், Bank A/c open செய்ய உதவி கிடைக்கவும் தொடர்ந்து ஜெபிப்போம். தேவனாலே எல்லாம் கூடும். தேவனுக்கே மகிமை செலுத்துவோம். Praise be to God Almighty.

Moses Vijaya Kumar, Secretary.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்." யாக்கோபு 5:15

இயேசுவே...
இரட்சகரே...
ஆண்டவரே...
திரியேகரே...
எங்கள் பிறவிதனை
குறைவின்றி
நிறைவாய்
படைத்தவரே!
"கண்களால்"
இறை படை உலகையும்
இயற்கை எழிலையும்
கண்குளிர கண்டு
மகிழவும், வாழவும்...
"காதுகளால்"
இனியவையையும்
இயேசுகிறிஸ்துவின்
மகிமையையும்
மகிழ்வுடன் கேட்டு...
அறிவு, ஞானமாய்
விவேகத்தோடும்...
நோய்நொடியின்றி
உறுதியான
உறுப்புடன் கூடிய
உடலுடனும்,
உன்னதரின்
ஈவின்படி
வாழ்நாள் எதுவரை
அதுவரை
இயேசுவே உமை
துதிக்கவும்
மகிமைப்படுத்தவும்
நற்சாட்சி பகிரவும்
உம் பாதம்
சமர்ப்பணம்!!

அருமையானோரே!
"நீ விசுவாசிக்கக்
கூடுமானால் ஆகும்,
விசுவாசிக்கிறவனுக்கு
எல்லாம் கூடும்"
(மாற்கு 9:23)
இயேசுவிடமோ
என்றும் மாறாத
சந்தேகமே இல்லாத
திடமான விசுவாசம்
ஒன்றே வேண்டும்
இறந்து நான்கு
நாட்கள் ஆனதே...
"லாசரே எழுந்து வா...
இயேசு அழைக்கவே...
நொடி பொழுதிலே
எழுந்தானே லாசரே"
உயிர் மீட்சி பெற்றான்
இதயம் நொறுங்கி
உள்ளம் உருகி
முழந்தால் இட்டு
ஜெபிக்கும் ஜெபம்
எவ்வித கொடிய
நோயாளியையும்
இரட்சிக்குமே!!!
மானிட
பாவத்தினை
மன்னிக்கவே
மண்ணுலகினிலே
மனிதனாகவே
அவதரித்தார்
ஆண்டவர்
இயேசுகிறிஸ்து.

அன்பானோரே
அக பாவமும்
ஆசாபாசமும்
இதயவீழ்ச்சியும்
ஈடின்றி தவிப்போரை
உதவிக்கரம் நீட்டி
ஊடுருவும் பார்வையுடன்
எழில்மிகு
ஏசு அழைக்கிறார்
ஐயம் தவிர்த்தே
ஒன்றுசேர
ஓடியே வாருங்கள்
ஔஷத வாழ்வுதனை
ஃ என பெற்றிடுங்கள்
கருணைக்கடலாம்
கர்த்தரை
உறுதியோடே
பற்றிக்கொள்ளுங்கள்
கடல்தனை
வந்தடையும்
நதிபோல...
இறைஇயேசுவிடம்
இரண்டற
இணைந்திடுங்கள்
அக்ஷணமே
அற்புதத்தைக்
காண்பீர்கள்
ஆனந்தம்
அடைவீர்கள்
காணாத வாழ்வு
வரும்
கர்த்தரின்
ஆசீர்வாதம்
பெருகும்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## பேசப்பட்டது யாக்கோபின் நாட்களிலும் கன்னிமரி நாட்களிலும் யேசு பிறப்பது !

பிறக்கிறது தெரிகிறது
சிறக்கிறது தெளிகிறது
பந்நூறு ஆண்டுகள்
பேச்சாக வளர்கிறது

ஊர்பேர் உலாவருகிறது
வேர்யார் வெளிவருகிறது
தாயின்னும் பிறக்கவில்லை
தாயின்தாய்யார்? தெரியவில்லை!

யாக்கோபு மூப்பாகி
வீட்டோடு வீடாகி
கேட்காத செய்திகள்
குமாரரையும் கேட்கவைக்க

கூட்டினார் கூட்டத்தை
காட்டினார் கோத்திரத்தை
ஆசீர்வாதம் சொல்லிச்சொல்லி
அனைவரையும் ஆசீர்வதித்தார்

யூதாவின் காதோரம்
சொன்னதெல்லாம் நடந்துவிட்டது
யூதாவின் செங்கோலும்
சொன்னபடி நிலைத்திருந்தது

ஏசாயா பேச்சோடே
கர்த்தர்தந்த அடையாளம்
தாவீதின் வம்சத்தாரே
தேவசெய்தி கேட்டதாகும்

ஒருகன்னிகை கர்ப்பவதியாகி
ஒருகுமாரனைப் பெறுவாள்
அவருக்கு இம்மானுவேல்
ஆசைப்பேர் நேசக்குமாரன்

யூதாவின் ராஜாக்கள்
ஆண்டுவந்த நாட்கள்
மீகாவின் வாயாலே
கர்த்தரின் வார்த்தைகள்

எப்ராத்தா எப்படிப்பட்ட
நற்பேர்பெற்றாய் பெத்லகேமே
ஆயிரத்தில் சிறியநீயே
யூதாவன் விலாசமானாய்

உன்னிடத்தில் புறப்பட்டு
என்னிடத்தில் வருகிறவர்
இஸ்ரவேலை ஆளப்போகிறவர்
உன்னதத்து முடிவாச்சு

அவருடைய புறப்படுதல்
அனாதி நாட்களாகிய
பூர்வத்திலே பதியப்பட்டது
ஆர்வத்திலே நிறைவேறுவது

தேவப்பிரியன் காபிரியேல்தூதன்
லோகப்பிரியை மரியாள்முன்
தேவச்செய்தி யேசுபிறப்பது
இறுதிஉறுதி பெறுகிறது

அதிர்ந்தமரிக்கு ஆறுதலாய்த்தூதன்
தெரிந்துகொண்ட தெய்வத்தாய்
அதிர்ச்சிவிட்டு ஆண்டவருக்கு
அடிமையென்றார் அழைக்கப்பட்டதாய்!

ஆதாரங்கள் : ஆதியாகமம் 49:10, ஏசாயா 7:14, மீகா 5:2
கவிதை எண் : 274
ஆக்கம் : மணிமுத்து.

## திருச்சபை ஜெபநாள் 03-11-2024 (முதல் ஞாயிறு)

"ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்." மத்தேயு 7:8

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

### துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலன், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- நம் பணிகள், தொழில்கள் மற்றும் பிரயாணங்களில் ஆண்டவர் அருளிய பாதுகாப்பிற்காக துதிப்போம்.
- காலநிலையில் தந்துவரும் மாற்றங்களுக்காக ஆண்டவரைத் துதிப்போம்.

### திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக,
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனையின புதிய மருத்துவர்களுக்காக, அவர்கள் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## இந்திய நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் ஆட்சியாளர்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வேளாண்மை (விவசாயி) களுக்காக, அனைத்து சமயத்தாரும் ஒற்றுமையாக இருக்க, மனித நேயமும், வறட்சி நீங்க, இயற்கை வளங்கள் பாதுகாப்புக்காக, மழைக்காக, மழைநீரை பாதுகாக்க ஜெபிப்போம்.
- இந்திய அரசு பாரபட்சமில்லாமல், நடுநிலையோடு ஆட்சி செய்ய
- வேற்றுமைகள் ஒழிந்து சமத்துவம் வளர
- தேசம் முழுவதும் எல்லை பாதுகாப்புக்காக
- தேசத்தில் நடைபெறும் அனைத்து மிஷனெரி ஊழியங்களுக்காக
- மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக

## ஐக்கிய அரபு நாடுகள் (UAE) தேசங்களுக்காக ஜெப வேண்டுதல்கள்

- UAE தேசங்களில் வசிக்கும் மக்கள் நல்வாழ்வுக்காக
- அரசர் குடும்பங்களுக்காக
- நல்ல வேலை வாய்ப்புக்காக, வேலை தேடி வருபவர்களுக்கு வேலைகள் கிடைக்க
- UAE-ல் உள்ள CSI திருச்சபை ஊழியங்களுக்காக
- UAE-ல் நடைபெறும் அனைத்து திருச்சபைகள் ஊழியங்களுக்காக
- அனைவருக்கும் ஆண்டவரின் நற்செய்திக்காக
- அனைத்து சமயத்தாரும் சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ

## உலக நாடுகளுக்காக ஜெப வேண்டுதல்கள்

- உக்ரைன் - ரஷ்யா போர் சமாதானத்திற்காக
- இஸ்ரவேல், பாலஸ்தீனம், லெபனோன், ஈரான் தேசங்களுக்காக
- உலக நாடுகள் சமாதானத்திற்காக
- பருவநிலை மாற்றத்திற்காக
- உலகம் முழுவதும் நடைபெறும் ஆண்டவரின் திருப்பணிக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக ஜெபிப்போம்.
